செ.வெ.எண் : 09 நாள் : 13.08.2018

**கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் பவானி ஆற்றங்கரையோர பகுதி மக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் வெள்ள ஆபாய எச்சரிக்கை...**

*********

கோயம்புத்தூர் மாவட்டத்தின் சுற்றுவட்டார பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் பில்லூர் அணை தனது முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், பில்லூர் அணைக்கு தற்போது வரும் 10ஆயிரம் கன அடி நீரில், அணையின் பாதுகாப்பு கருதி முதற்கட்டமாக 6,000 கன அடி நீர் வெளியேற்ற இருப்பதால், பவானி ஆற்றங்கரையோர பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார், இதுதொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தென்மேற்கு பருவமழையின் தீவிரம் காரணமாக கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகின்றது. நீலகிரி மாவட்டத்தில் கனமழை பெய்து வருவதையடுத்து குந்தா அணை நிரம்பியுள்ளதால், உபரி நீர் பில்லூர் அணைக்கு வினாடிக்கு 10,000 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருப்பதாலும், தற்போது பில்லூர் அணை தனது முழு கொள்ளளவை எட்ட உள்ள நிலையில், பில்லூர் அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 6,000 கனஅடிவீதம் இரண்டு மதகுகள் வழியே திறக்கப்படவுள்ளதால் பவானி ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் விழிப்புடன், பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுமாறும் மேலும், ஆற்றில் இறங்குவதோ, ஆற்றினை கடக்க முயற்சி செய்யவோ வேண்டாம் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ந.ஹரிஹரன் இ.ஆ.ப., அவர்கள் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**